



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 விடை நல்லோரை வைகாசித் திங்கள், 01ம் நாள் (15-05-2022) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## திருஞானசம்பந்தர் குருபூசை



விடை நல்லோரை வைகாசித் திங்கள் 4ம் நாள் (18-05-2022) வைகாசி மூல நட்ச்சத்திரத்தில் திருஞான சம்பந்தர் சுவாமிகளின் குருபூசை நாள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் கொண்டாடப்படும்.

# கணபதிபாளையத்தில் சிறப்பாக நடைபெற்ற அருள்மிகு திருவீழியழகர் மற்றும் அப்பர் பெருமான் திருமட திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், குண்டடம் கிராமம் கணபதிபாளையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கற்றளித் திருக்கோயில் மற்றும் அப்பர் பெருமான் திருமடத்தின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவானது அருட்குருநாதர் ஒளியகம் நா.ஒளியரசு ஐயா மற்றும் ஞானாசிரியர் சிவத்திரு.அ. பவானி தியாகராசன் ஐயா தலைமையில் செந்தமிழ் வேதங்கள் ஓதி மிகவும் சிறப்பாக, திருவள்ளுவர் ஆண்டு 2053 சித்திரைத் திங்கள் 9ம் நாள் (22-04-2022) அன்று திருவருள் துணையுடன் நடைபெற்றது.



### திருநாவுக்கரசர் திருமடம் தோற்றமும் வளர்ந்த விதமும்:

தமிழகம், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், குண்டடம் கிராமம் கணபதிபாளையத்தில் சுமார் 89 ஆண்டுகளுக்கு முன்பு எமது குலப் பெரியோர்களின் சிந்தனையில் பெருமான் உணர்த்த உலகேத்தும் உழவாரப் படையாளி திருநாவுக்கரசு பெருமான் பெயரில் திருமடம் ஒன்று துவக்கப்பட்டது. அவ்வழியே வரும் அடியார் பெருமக்கள் வந்து தங்கி உணவு உண்டு இளைப்பாறும் விதமாக மடம் அமைக்கப்பட்டது. வழி வழியாக குடும்பத்தின் தலைமகன் அம்மடத்தை பேணிப் பாதுகாக்கும் பொருட்டு நன்செய் நிலம் 5 ஏக்கர் ஒதுக்கப்பட்டு அந்நிலத்தின் வருமானம் மடத்திற்கு சேரும் வண்ணம் சாசனம் செய்து வைத்துள்ளனர் பெரியோர்கள்.

திரு அண்ணாமலையில் இருந்து மூர்த்திகள் எடுத்து வரப்பட்டு, ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் சோதி அன்று சாதுக்களுடன் கூடி குருபூசை சிறப்பாக நடை பெற்று வந்தது. 2010 ஆண்டிற்கு முன் சுமார் 25 ஆண்டுகள் மடம் முற்றிலும் சிதைவுற்று குருபூசை விழா தடைப்பட்டிருந்தது.

(05ஆம் பக்கம் பார்க்க)




# கோவை அருள்மிகு வெள்ளையங்கிரி ஆண்டவர் திருக்கோயிலில் பேரூர் ஆதீனம் தலைமையில் மழை வேண்டி செந்தமிழ் வேள்வி



கோவை மாவட்டம் வெள்ளையங்கிரி மலையடிவாரத்தில் உள்ள அருள்மிகு வெள்ளையங்கிரி ஆண்டவர் திருக்கோயிலில், ஊர் நன்மைக்காக மழை வேண்டி, பேரூர் ஆதீன குருமகா சன்னிதானம் தவத்திரு. சாந்தலிங்க மருதாசல அடிகளார் தலைமையில் சித்திரைத் திங்கள் 8ம் நாள் (21-04-2022) அன்று வேள்வி நடத்தப்பட்டது. இதில் சிரவை ஆதீன கௌமார மடாலய குருமுதல்வர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இங்கு செந்தமிழ் ஆகம முறையில் யாகம், நீராட்டு மற்றும் பூசைகள் இடம்பெற்றன.



வேள்வியின் கும்பநீர் திருக்கோயில் கேணியில் கலக்கும் போது, மழை வேண்டி மேகராகக்குறிஞ்சி பண்ணில் ஓதுவாமூர்த்திகளால் திருமுறை விண்ணப்பமும் செய்யப்பட்டது.

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங் கீரிருவர்க்கு இரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை உரைத்தொளிசேர் நெறியளித்தோனின்ற கோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோது மோசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லு மிழலையாமே.

திருச்சிற்றம்பலம்

# யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் மங்களநாதப் பெருமானுக்கு திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா



**சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்**
**இனிஎதிர் காலத்தின் சிறப்பும்**
**இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்**
**எற்றைக்குந் திருவருள் உடையேம்**
**நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்**
**நற்றமிழ் வேந்தனும் உய்ந்து**
**வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்**
**மேன்மையும் படைத்தனம் என்பார்.**

எந்த ஒரு விடயமாக இருந்தாலும், அது இயங்கு தன்மை அற்றதாக இருந்தால் அது மெல்ல மெல்ல மங்கி அழிந்தே போய் விடும். சைவமும், தமிழும் கூட இதற்கு விதி விலக்கானதல்ல. இன்று உலகில் தோன்றிய பெரும்பாலான பழைய மொழிகள் அழிந்து போனாலும், தமிழ் அழிந்து போகாமல் இருக்கக் காரணம், அதன் இயங்கு தன்மையும் காலத்திற்கேற்ற சீரமைப்பும் தான். சைவமும் இன்று நிலவ அதே விடயம் தான் காரணம். காலத்துக்குக் காலம் தோன்றிய அருளாளர்கள் சைவத்தை இயங்கு தன்மையுடன் பேணியதோடு சைவத்தை வளர்த்து எடுத்தனர்.

அதன் தேவை இன்றும் உள்ளது. வெறுமனே சைவத் தினதும் தமிழினதும் பழம்பெரும் பெருமையைப் பற்றிப் புகழ்ந்து, எமக்குள்ளே இரகசியமாகப் பேசிக் கொண்டிருந் தால் மட்டும் போதாது. அதை அடுத்த தலைமுறை யினரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும். அந்த வகையில் மாணவச் சிறார்களை சைவத்தமிழ் வழிபாட்டில் ஈடுபடுத்தும் நோக்கில், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் சிவலிங்கத் திருமேனி திருநிலைப் படுத்தப்பட்டு, கீழறை (பிலவ) ஆண்டு, மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 28ம் நாள் (11.04.2022) திங்களன்று கட்செவி (ஆயில்யம்) நாண்மீன், வளர்பிறை பதின்மைப் பிறைநாள், யோகர் சுவாமிகளினுடைய குருபூசை நன்னாளில் திருக்குடமுழுக்குச் செய்யப்பட்டது.

அருள்மிகு மங்களநாதப் பெருமானாக பிறவா யாக்கைப் பெரியோன் எம்பெருமான் எழுந்தருளினார். இந்த நிகழ்வில் பேரூர் ஆதீனம் சீர்வளர் சீர் சாந்தலிங்க அடிகளாரும், தருமபுர ஆதீன திருநெல்வேலி கட்டளை விசாரணை திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் அவர்களும், தென்கயிலை ஆதீன குருமுதல்வர் அவர்களும், சிவகுரு ஆதீன குருமுதல்வர் அவர்களும் கலந்து கொண்டு ஆசி வழங்கினர். குருமகா சன்னிதானங்கள் ஆசியுடன், தென்னாடு செந்தமிழாகம சிவமட சிவாச்சாரியார் குருநாதர் உமையொருசிவம் நிகரிலரசு ஐயா அவர்களும் திருக்குடந்தை தெய்வத்தமிழ் திருக்கூடல் மெய்கண்ட சிவம் இறைநெறி இமையவன் ஐயா அவர்களும் இணைந்து செந்தமிழ் வேள்வி ஆற்ற, வான் முகில் வளாது பெய்ய, மலிவளஞ் சுரக்க, நற்றவம் வேள்வி மல்கக் குடமுழுக்குக் கண்டார் மங்கள நாதர்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். சைவமும் தமிழும் தழைத்தோங்க யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார் எம்பெருமானார்.

# மிகவும் சிறப்பாக நடைபெற்ற வல்வை முத்துமாரியம்மன் தேர்



கடலலைகள் தாலாட்டும், கப்பல் வந்து கரை சேரும் வல்வெட்டித்துறையில் கோயில் கொண்ட வல்வை முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த திருவிழாவானது பங்குனியில் தொடங்கி, சித்திரை 2ம் நாள் தேர்த் திருவிழாவும் இடம் பெற்றது. இத்திருவிழாவில், தரும புர ஆதீன திருநெல்வேலி கட்டளை விசாரணை திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் கலந்து கொண்டு, வல்வை மண்ணில் இடங்கொண்டு, எந்நாளும் அடியார்களின் துயர் துடைக்கும் முத்துமாரி அம்மையின் திருத்தேர் அருட்காட்சி கண்டதோடு, அடியாருடன் அடியாராக வடம் பிடித்து, அம்மையின் திருத்தேர் வலத்தை தொடங்கியும் வைத்தார்.

தேரின் வீதிவலமும் நிறைவடைந்து, அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும், பூங்காவனமும் என அழியாப் புகழும் புத்தெழிலும் கொண்ட, வல்வை முத்துமாரி அம்மை, அடியார்களுக்கு அளவில்லா அருளை வழங்கிய வண்ணம் திருவிழா நிறைவுற்றது.

**ஊர் கூடி கொண்டாடும் வல்வை முத்து மாரியம்மா**
**உன்வாசல் வந்தாலே வந்த வேலை தீரும் அம்மா**
**வேப்பிலைக்காரியம்மா, எந்நாளும் உன் புகழை பாடிடுவோம் மாரியம்மா**
**எங்கள் முத்து மாரியம்மா, எங்கள் முத்து மாரியம்மா!**

**திருச்சிற்றம்பலம்**






# மானிப்பாய் மருதடி விநாயகர் தேர்

மானிநகரில் மருதம் கொஞ்சி விளையாடும், மருதடித் திருவூரிலே, புதிய கருங்கல் கட்டுமானங்களுடனான புத்தெழில் கோயில் கொண்ட ஐங்கரப் பெருமானின் திருவிழா கடந்த திங்கள் தொடங்கி, மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல், அவர் தம் நல்விழாப் பொலிவு கண்டார்தல் என்று சேக்கிழார் பெருமானார் அருளிச் செய்த வகையில் மதி சூடும் பெருமானின் வினை தீர்க்கும் திரு உருவாம் விநாயகப் பெருமானின் திருவிழாப் பொலிவை அடியார்கள் கண்டு ஆர்த்தனர்.

தமிழ்ப் புத்தாண்டு அன்று, அழித்தற் திருவிழாவான தேர்த்திருவிழா செம்மையாக நடந்தேறியது. அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும், இத்திருவிழாவில், தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் அழைப்பின் பேரில் யாழ் வருகை தந்திருந்த, தருமபுர ஆதீன திருநெல்வேலி கட்டளை விசாரணை திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் கலந்து சிறப்பித்துள்ளார். பூசை நிறைவில் அடியார்களுக்கு சிறிய சொற்பொழிவினையும் தம்பிரான் சுவாமிகள் ஆற்றியிருந்தார்.

**“ஞானக் கொழுந்தினைப் புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே”**

# வைகாசியில் பொங்கல் காணுகின்றாள் வற்றாப்பளையாள்



தமிழ் தம் பெண் தெய்வங்களுள் செம்மையும் முதன்மையும் வாய்ந்தவள் கண்ணகியாள். ஒற்றைப் பெண்ணாகக் கையில் சிலம்பேந்தி நீதி கேட்டு வாதாடி, மாமதுரையையே எரித்து அழித்தாள். அத்தகு பெண்மை யின் பேராற்றல் உடையவள், ஈழத்திருநாட்டின் வற்றாப் பளையில் பத்தாவது இடமாக அமர்ந்து குளிர்ப் படைந்தாள் என்று நாட்டார் வழக்கியல் பேசுகிறது. இந்தத் தலத்தின் வரலாற்று மரபின் படி கண்ணகி என்ற பத்தினித் தெய்வமே “கண்ணகை அம்மன்” ஆக வழிபடப்படுகிறார் என்ற நம்பிக்கை உள்ளது. இத் தெய்வத்தின் வரலாற்றைப் பேசும் “சிலம்பு கூறல்” என்ற ஏட்டு இலக்கியம் பொங்கல் நாளில் இங்குப் படிக்கப்படும். இந்த இலக்கியத்தில் இடம்பெற்ற கதை அம்சம் தமிழகத்தின் சிலப்பதிகாரம் என்ற பேரி லக்கியத்தின் கதையம்சத்தோடு தொடர்புடையது.

சிலம்பு பாடிய இளங்கோவடிகள் கூட “கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்” என்று கண்ணகி கோயில் கடவுள் மங்கலப் பெருவிழாவில் இலங்கை மன்னன் கலந்து கொண்டதாக சான்று பகிர்கின்றார். அத்தகு செம்மை வாய்ந்த கண்ணகித் தாயவளின், கண்ணகி அம்மையின் பொங்கல் விழாச் சடங்கு வைகாசி முறம் (விசாகம்) நாண்மீன் நாளில் நடைபெற உள்ளது. நல்லடியார்கள் கலந்து அவளின் அருள் பெற்று உய்வோம். இப்பொங்கல் விழா நாட்களில் கடல்நீரில் விளக்கெரித்தல் (தீபம் ஏற்றல்) என்ற அற்புதம் நிகழ்த்தப்படுகிறது.

**”வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படுவார்”**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,**
**ஆசிரியர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் - கொக்குவில்.**
0715588737, aathan@thennadu.org



# ஆதியை அறியுமா ஆதீனங்கள்?

சைவப் பெரும் சமயத்தின் தனித்துவமான சித்தாந்தங்களையும், ஆதி அந்தம் இல்லாத இறைவன் தந்த தமிழையும் காப்பதற்கெனவும், அதைக் காலம் தோறும் மக்களிடையே எழுச்சியுறச் செய்வதற்கெனவும், குரு சீட பரம்பரையாக, ஒரு ஞான பரம்பரையின் வழியே தொன்றுதொட்டு வருவனவே சைவ ஆதீனங்களாகும். இன்று பேசு பொருளாகியிருக்கின்ற தருமபுரம் ஆதீனமும், அத்தகு முனைப்போடு தோற்றம் பெற்ற ஒன்றே. அவ்வாதீனத்தின் இருபத்தியேழாவது ஆதீன முதல்வரான சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் அவர்களை, **'பட்டினப் பிரவேசம்'** என்று சொல்லப்படுகின்ற, குருவை சீடர்கள், ஊர்வலமாக பல்லாக்கு ஒன்றில் சுமந்து செல்லும் நிகழ்வுக்கு, தமிழ்நாடு அரசு தடைவிதித்துள்ளமையே தருமபுர ஆதீனம் குறித்து பொதுவெளியில் எழுந்துள்ள தர்க்கங்களும், கருத்து மோதல்களும் காரணம் ஆகும்.

தற்போது தமிழகத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம், சுயமரியாதைக் கருத்துக்களை தன்னகத்தே கொண்டதும், வர்க்க பேதங்களை களையும் கருத்துக்களோடு, வருணாசிரமத்தை முற்றாக எதிர்க்கும் அமைப்பாகவும் பார்க்கப்படுகிறது. எனினும் சில அரசியல் காரணங்களாலும் தான், தொன்றுதொட்டு நடாத்தப்பட்டு வந்த 'பட்டினப் பிரவேசம்' எனும் நிகழ்வு நிறுத்தப்பட உத்தரவு பிறந்தமைக்கான காரணம் என்றும் சிலர் கூறுகின்றனர்.

1973ம் வருடம் ஆட்சியில் இருந்த கலைஞர் அவர்கள் அவ்வாண்டு மனிதர்களை மனிதர் கைகளால் இழுத்துச் செல்லும் கைவண்டிகள் எனப்படும் 'கைரிக்சாக்களை' இழுக்கும் முறையை ஒளித்து. அந்த தொழிலாளிகளுக்கு உந்துருளி வண்டிகளை வழங்கி வைத்தார். இது தினந்தோறும் அந்தத் தொழிலாளர்கள் அனுபவித்த துன்பத்திற்கு மருந்தாக அமைந்தது. அதே தி.மு.க அரசு இன்று ஆண்டில் ஒருமுறை மட்டும், சீடர்கள் அன்பின் நிமித்தமும் பத்தியின் வெளிப்பாடாகவும், தம் குருவை சுமக்கும் நிகழ்வுக்கு அனுமதி மறுத்துள்ளமை பல சைவத் தமிழ் அன்பர்களின் மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நிற்க

பரம்பரை வழி வந்த ஆதீன முதல்வருக்கு ஏன் இந்த உயர்நிலை வழங்கப்படுகிறது? ஆதீனத்தில் குருவை இறைவனாகப் பாவனை செய்து ஏன் வழிபாடு நிகழ்த்தப்படுகிறது என்றால், அதற்கு ஒரே ஒரு காரணம் அருளில் சிறந்த இறைவனோடு நேரடியாக இருந்து அறிவைப் பயின்ற, திருக்கயிலாய பரம்பரையின் சீடர்களான அகச்சந்தான குரவர்களின் உயர் ஞானத்தைப் பெற்று, ஞானப்பரம்பரையை தோற்றுவித்த புறச்சந்தான குரவர்களால் திருநிலைப்படுத்தப்பட்ட ஆதீனங்களின் முதற் குருவானவர், அருவ நிலையில், தற்போதுள்ள ஆதீன முதல்வரின் உடலில் அருட்டிப்பதாக கருதுவதேயாகும். எனவே அத்தகு நிலை வாய்க்கப்பெற்றிருந்த ஆதீன முதல்வர் சிவப்பணியே தவப்பணி என்று கருதி இருத்தலும், தமிழ்பணியும் சைவப்பணியும் கண்களெனப் போற்றி என்றும் செய்தலும் செய்வித்தலும் இன்றியமையாதனவாகும்.

சுமார் இருபத்தியேழுகளுக்கு மேல் கோயில்கள் தருமை ஆதீனத்தின் நிர்வாகத்தில் உள்ளது. இவ்வாலயங்களில் சைவ ஆகமம் தான் பின்பற்றப்படுகின்றனவா? தெய்வத்தமிழில் தான் அர்ச்சுனை நடைபெறுகின்றனவா? போன்ற கேள்விகள் ஒருபுறம் இருக்க, மக்கள் மதிக்கும் புனிதத்தன்மை பெற்ற ஆதீன முதல்வர்கள் தனிப்பட்ட நட்ட இலாபங்களைக் கருதி, தக்கார் தகவிலார் என்பது அறிந்து தெளியாமல் தம் விருப்புக்கும், சுய இலாபங்களுக்கும், வெளிவிளம்பரங்களுக்கும் விரும்பி செயற்படுகின்றார்கள் என்பது வேதனை தரும் விடயமே ஆகும்.

அடிப்படையிலேயே கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்ட ஆளும் தி.மு.க அரசின் முதல்வரை, சிவப்பரம்பொருளை முழுமுதற்கடவுளாக கொண்ட தமிழகத்தைச் சேர்ந்த ஆதீன முதல்வர்களும் மட பீடாதிபதிகளும் கடந்த ஏப்ரல் 27ம் திகதி தாமே நேரில் சந்தித்திருந்தனர். முதல்வரின் வருகைக்காய் காத்திருந்து, சந்தித்த ஆதீன முதல்வர்கள் தம் கருத்துக்களை முதலமைச்சர் சார்ந்து பலவாறு பாராட்டி பகிர்ந்த போது, தருமை ஆதீன முதல்வரோ "தமிழகத்தில் நடப்பது ஆன்மீக ஆட்சி" என்று இன்னும் ஏற்றிப் புகழ்ந்தார். இன்று அதே அரசால் ஆதீன நடைமுறைக்கு தடை வரும் போது பேச்சற்றவராய், மதுரை ஆதீனம் தமிழக அரசை எதிர்த்து கோசம் எழுப்பும் காணொளியைப் பகிர்வதை கண்ணெதிரே காண் கின்றோம். இறைவனின் புகழையும் திருக்கயிலாய பரம்பரை வழிவந்த தம் ஞானப் பரம்பரையின் புகழையும் பேசிப் பாடவேண்டிய நாவால் பிறர்புகழை பேசியதன் பயன்தான் என்ன.

யார் யாரை தேடிப் போக வேண்டும் என்பதும், யார் யார் புகழைப் பேச வேண்டும் என்பதும் கூட, 'பட்டினப் பிரவேசம்' போலவே ஆதீன மரபுதான் என்பதை அறியாத அவரது செயல் தான், இச் சிறியேனைப் போன்றவர்களும், அவரை விமர்சிக்கும் படியானதும் அவர் தம் தவக்குறைவேயாகும்.

பத்தி மார்க்கத்தையும் அருள் நெறியையும் பரப்ப வேண்டிய ஆதீனங்கள், சைவத் தமிழ் வழிபாட்டைக் கூட மறந்து அரசியல் சாயம் பூசிக் கொள்வது ஆரோக்கியமற்ற ஒன்று. தமிழகத்தில் பொருளும் அருளும் நிறையப் பெற்ற ஆதீன மரபு உண்டு. அதைக் காத்து ஞானப்பரம்பரையை வளர்ப்பதே சைவப் பேருலகத்திற்கு தேவையானது. அதுவே எம் ஆதியின் மூலமுமாகும். தமிழக ஆதீனங்களைப் போல் பொருள்வளம் பெறாவிட்டாலும் கூட அருள் வளத்தால் ஆன்மீகம் வளர்த்து, பத்திமார்க்கத்தைப் பின்பற்றிப் பரப்ப வேண்டிய ஈழநாட்டு ஆதீனங்களும் அரசியல் சகதிபடாமல் விலகியிருப்பதே சாலச்சிறந்த செயலாகும். எதிர்காலம் நோக்கிய சீரிய திட்டமிடல்கள் இன்றி பயணிப்பது ஆபத்தானது என்பதையும் ஈழநாட்டு ஆதீனங்களும் உணர வேண்டும். எது எவ்வாறாயினும் மக்கள் ஆதீனங்களின் பக்கம் நின்று குரல் கொடுக்க வேண்டுமாயின் என்ன நோக்கத்துக்காக ஆதீனங்கள் தோற்றம் பெற்றனவோ அந்த ஆதியை அறிய வேண்டும் ஆதீனங்கள்!

**'பாரணியும் ஞானசம்பந்தன் எந்தை**
**பரமன் இரு சரணமலர் பரவி வாழ்வாம்'**

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு.யாழவன் சிவவேதன்,**
**அடுத்த தலைமுறை ஆசிரியர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் - கொக்குவில்.**
021 222 9722, sivavethan@thennadu.org



# மங்கையற்குத் தனி அரசி எங்கள் தெய்வம்

"பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையிருந்ததே" என்று சத்தியை முதன்நிலைப்படுத்தி சிவனைப் போற்றுகிறது சைவம் **"அவளின்றிச் செய்யும் அருந்தவம் இல்லை. அவள் இன்றி ஐவரால் ஆவதொன்றில்லை"** என்றும் இதே சைவம் தான் பேசுகிறது. இத்தகு பெண்மையின் பெருமை இறைவனை மட்டுமே வைத்துப் பேசப்படவில்லை. இறைவனின் அடியார்களாகிய திருத்தொண்டர்களைப் பற்றிப் பேசும் போதும் பெண்ணின் பெருமையை சைவம் பேசுகிறது. கற்பெனும் ஆயுதம் வாய்க்கப்பெற்றால் பெண்ணை விட பெரிய ஒன்று வேறேது என்று வள்ளுவப் பெருமான் கேள்வி தொடுக்கிறார்.

**"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவார்"** என்று சிலம்பு பேசுகிறது. இப்படிப்பட்ட பெருமையும், பேராளுமையும் வாய்ந்த பெண்கள் பலர் தமிழர் இனப்பரப்புக்குள் வாழ்ந்து போயுள்ளனர். ஆயினும் ஒவ்வொருவருடைய பெருமையும் ஒவ்வொரு விதமானது. காமனை வழிபட்டு மாதவியிடம் சிக்கிக்கிடக்கும் உன் கணவனை மீட்டுக் கொள் என்று கண்ணகிக்கு ஒருவர் கூறிய போது, அது பெருமையில்லை என்று தவிர்த்தாள் கற்புக்கு அரசியாள். மங்கையற்கே அரசியான மங்கையற்கரசியோ தன் கணவர் வழிதவறியபோது, வழித்துணையாகித் திருத்திப் பெருமை கொண்டாள். கற்புக்கரசியாகிய கண்ணகியும், மங்கையற்கரசியாகிய வரிவளை மானியும் மாமதுரை நகர் வரலாற்றில் தவிர்க்க முடியாதவர்கள். இருவரும் கற்பில் செம்மையானவர்கள். இருவரும் சோழநாட்டில் இருந்து பாண்டிய நாடு புகுந்த பெண்கள் தான். ஆயினும் அவர்கள் வேறுபட்டு நிற்கும் இடம் ஒன்றுதான். கற்புக்கரசி மதுரையை எரித்தாள், மங்கையற்கரசி மதுரையைத் திருத்தினாள்.

மதுரை மாநகர் தமிழர்தம் வரலாற்றில் நீக்கப்படமுடியாத நகர். ஆலவாயின் கண்ணேதான். ஆலமர் செல்வர் ஆதிப்புலவராய் அமர்ந்து கடைச்சங்கம் காத்தார். வாதவூரர் பிறந்து வண்டமிழ் தந்த நாடும் அதுவே, கூடலாம் மதுரை மாநகரின் சிறப்பை சொல்லச் சொல்ல வந்து கொண்டே இருக்கும். இத்தகு அத்தனை சிறப்பையும் காத்தவள் ஒற்றைப் பெண் தான் என்றால் நம்பமுடிகிறதா? மங்கையற்கரசியும் குலச்சிறையாரும் இல்லாவிட்டால் பாண்டியநாட்டில் சைவமே இருந்திருக்காது. இதை நான் சொல்லவில்லை. **"இருவர் தம் பாங்கும் அன்றிச் சைவம் அங்கு எய்தாது ஆக"** என்று தெய்வச் சேக்கிழார் சொல்லுகிறார்.

மூவேந்தர்தம் நாடுகளுள் ஒன்றாகிய பாண்டிய நாட்டில் சைவமே இல்லையென்றால் எப்படியிருக்கும்? நினைத்துக்கூடவே பார்க்க முடியாத அத்தகு காரியத்தை நிறைவேறாமல் செய்தவர் தான் பெரியபுராணக் காப்பியத் தலைவர்களுள் ஒருவரான மங்கையற்கரசி யம்மையார். இளங்கோவடிகளின் வாக்குகளில் ஒன்று ஊழ்வினை வந்து உறுத்து ஊட்டும். அதனையே தான் சேக்கிழார் பெருமானும் சொல்கின்றார். தான் செய்த வினைப்பயனாக பாண்டிய மன்னன் சமணசமயத்தை தழுவியமையால் மதுரை மாநகர் முழுவதும் சமணர் கூட்டம் மொய்த்துக் கிடந்ததென்று எழுதுகின்றார் சேக்கிழார். பாண்டிய நாட்டின் பெருமை வாய்ந்த ஊர்களும் கோயில்களும் சமணர்களது பள்ளிகளாக ஆயின. எங்கு பார்த்தாலும் இருண்ட கூட்டமாக சமணர்கள் சுற்றித்திரிந்தனர். மக்களோ சமணக் குழுவினரின் போதனையுள் மூழ்கி சமணத்துள் மயங்கி விட்டனர். இத்தனை இருளிலும் அந்த சுடர் ஒளி அணையவில்லை. அவள் தான் மங்கையற்கு அரசி.

தன்மக்கள் சமயம் மாறியும், தன் சொந்தக்கணவனே மாறியும், தான் சைவநெறியிலிருந்து வழுவாமல் இருந்தாள் அந்தப்பெண். தன் கணவனுக்கு மாற்றாக அவள் துணிந்து வாழ்ந்தது அவளின் பெருமை. அதைவிடப் பெரும் பெருமை தன் கணவனை நல்வழிபடுத்த முயன்று அதில் வெற்றியும் பெற்றமைதான். திருமறைக் காட்டுக்கு வந்த ஆளுடையபிள்ளையாராகிய சம்பந்தரரைத் தூதனுப்பி அழைத்து, கூன்பாண்டியனை நின்ற சீர் நெடுமாறனாக்கி அவன் நெற்றியில் நீறு பூச வைத்து, நாட்டையே சைவத்திற்கு மாற்றுகின்றாள் ஒற்றைப் பெண்ணாக.

அதனால்அன்றோ **"தெய்வம் கொள்ளுமின் சிறுகுடியீரே"** என்ற இளங்கோவடிகளின் வாக்குக்குச் சற்றும் சளைக்காமல் மங்கையற்கரசியாரை ஒப்பிடக்கூடியதாக உள்ளது. **"எங்கள் தெய்வம்"** என்கிறார் சேக்கிழார். பெண் என்பவள் கணவன் செய்து விட்டான், தந்தை சொல்லிவிட்டார், சமூகம் இப்படி சொல்கிறது என்பதற்காக தலையசைத்துப் போகும் தலையாட்டிப் பொம்மை அல்ல. தவறுகளும் குற்றங்களும் நேருகின்ற போது கண்ணகி போல் தட்டிக் கேட்பதும், மங்கையற்கரசி போல் சீர் திருத்துவதும் பெண்ணுக்கே உரிய சிறப்பு. கணவன் சமணத்தை விரும்புகிறான், சமூகம் சமணத்தையே ஆதரிக்கிறது என்று மங்கையற்கரசியாரும் ஒத்துப்போயிருந்தால் என்ன ஆயிருக்கும் என்று யோசித்துப்பாருங்கள். சைவத்தின் பாதையில் பெண் என்பவள் பேராளுமை. திலகவதியார் திருநாவுக்கரசருக்கு குருவானது போல மங்கையற்கரசியார் தன் கணவருக்கே குருவாகிறார். அதனால் தானே **"மாசில் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ வழித்துணையே"** என்று மங்கையற்கரசியாரைப் புகழ்கின்றார் சேக்கிழார்.

**"செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்**
**சிவன்றிரு நீற்றினை வளர்க்கும்**
**பந்தணை விரலாள் பாண்டிமா தேவி**
**பணிசெயப் பாரிடை நிலவும்**
**சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தந்**
**தண்ணெருக் கம்மலர் வன்னி**
**அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ணல்**
**ஆலவா யாவது மிதுவே."**

என்று மங்கையற்கரசியாரின் சிறப்பினை திருஆலவாய் திருப்பதிகத்துள் பாடுகிறார் திருஞான சம்பந்தர். சிவன் திருநீற்றை வளர்க்கும் பந்தணை விரலாள் என்று சிறப்பித்தும் போற்றுகின்றார். அத்தகு பெருமைத்தன்மை வாய்ந்த பெண் மங்கையற்கரசியார். "தேசம் விளங்கத் தமிழாகரர்க்கு அறிவித்து, அவரால் நாசம் விளைத்தாள் அருகந்தருக்குத் தென்னாட்டகத்தே" என்று திருத்தொண்டார் திருவந்தாதி போற்றுகிறது. "மங்கையற்கரசி வளவர் கோன்பாவை வரிவளை கைம்மடமானி, பங்கயச்செல்வி பாண்டிமாதேவி" என்று சிவக்கன்றே மங்கையற்கரசியாரைப் போற்றுகின்றார். அத்தகு சிறப்பு வாய்ந்த சைவத்தின் குலதெய்வமாகிய மங்கையற்கரசியாரின் குருபூசைத்தினம் அண்மையில் தான் செம்மையாக இடம்பெற்றது. சைவத்தமிழ் மரபின் அன்னைக்கு ஒருநாளாகிய சித்திரை நிறைமதி நாளையும் கடந்த திங்கள் தான் கொண்டாடினோம். உலக அன்னையர் தினத்தையும் சில நாட்களுக்கு முன்னர் தான் கொண்டாடினோம். இத்தருணத்தில் சைவத்தின் பெண் பேராளுமையையும் போற்றி உய்வோம்.

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு மட்டுவார்குழலம்மை உடனுறை தாயுமானவர் (திருமலைக்கொழுந்தர்) திருக்கோயில் - திருச்சிராப்பள்ளி (மலைக்கோட்டை)

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 135 ஆவது திருக்கோயில் - திருச்சிராப்பள்ளி)




உதிரத்தை பாலாக்கி உவந்தளித்து, உயிர்கொடுத்து எமைக்கப்பவள் தாயானவள். அத்தகு தாயவள் பேரன்பை போற்றவும், எத்துயர் புகினும், எமைக்காக்கும் தாயுமானவர், தானே என உணர்த்திடவும், பன்றிக்கு பால்கொடுத்த பரமசிவனானவர், தாயவள் உருவெடுத்து, தாய்ச்சியின் (கருப்பிணியின்) மகப்பேற்றை நடத்தி, குலம் காத்திட்ட பரமன், மட்டுவார்குழலம்மை உடனுறை தாயுமானவர் உறையும் பதியே திருச்சிராப்பள்ளித் திருத்தலமாகும்.

**அமைவிடம் - திருச்சி மாவட்டம், தமிழ்நாடு**
திருச்சிராப்பள்ளி - திருச்சி என்று அழைக்கப்படுகிறது. தொடர்வண்டி சந்திப்பு நிலையம். தமிழகத்தின் எல்லா நகரங்களிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. விமான நிலையமும் உள்ளது. காவேரித் தென் கரையில் உள்ள ஊர்.

**இறைவர் திருப்பெயர்:** தாயுமானவர், திருமலைக்கொழுந்தர், தாயுமானேசுவரர், திரிசிராநாதர்

**இறைவியார் திருப்பெயர்:** மட்டுவார்குழலம்மை, சுகந்தகுந்தளாம்பிகை

**கோயில் மரம்:** வில்வமரம்

**தீர்த்தம்:** காவேரித் தீர்த்தம், பிரம்மத் தீர்த்தம்

**வழிபட்டோர்:** அகத்தியர், அனுமன், இந்திரன், அருச்சுனன், இராமர், உமாதேவி, எழு மங்கையர் (சப்த கன்னியர்), ஏழு முனிவர் (சப்த ரிஷிகள்), சூரவாத்த சோழன், திரிசிரன், நான்முகன், ஜடாயு, தாயுமானவர், இரத்தினாவதி முதலானவர்கள்

**பாமாலை:** சம்பந்தர், அப்பர், ஐயடிகள் காடவர்கோன், மணிவாசகர் (திருவாசகத்தில் ஒரு வரி)

### நாயன்மார்களால் பாடப்பட்ட பதிகங்கள்

**திருஞானசம்பந்தர் அருளியது**

நன்றுடையானைத் தீயதிலானை நரை வெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற என்னுளங் குளிரும்மே
- சம்பந்தர்- 1-98-1

**அப்பர் சுவாமிகள் அருளியது**

தாயுமாய் எனக்கேதலை கண்ணுமாய்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப் பள்ளி மேவிய
நாயனார் என நம்வினை நாசமே - அப்பர் 5-85-4

**சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி - திருவாசகம்**

**ஐயடிகள் காடவர்கோன் அருளியது (சேத்திர வெண்பா)**

கழிந்தது நென்னற்று கட்டுவிட்டு நாறி
ஒழிந்தது உடல் இராவண்ணம் - அழிந்தது
இராமல் ஐயா கொண்டு போ என்னா முன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர் - 11ஆம் திருமுறை

### திருத்தலச் சிறப்பு

உறையூரைத் தலைமையாகக் கொண்டு சோழ மன்னன் ஒருவன் இப்பகுதியை ஆண்டு வந்தான். அவ்வேளையில் சாரமா முனிவர் என்னும் சிவபத்தர், இத்தலத்தில் நந்தவனம் உருவாக்கி, தினமும் சிவனுக்கு செவ்வந்தி மலர் படைத்து பூசித்து வந்தார். ஒருசமயம் வணிகன் ஒருவன், முனிவரின் நந்தவனத்தில் மலர்களைத் திருடி, மன்னனுக்குக் கொடுத்தான். அம்மலர் மீது ஆசை கொண்ட மன்னன், தினமும் வணிகனை மலர் கொண்டு தரும்படி சொன்னான். எனவே அவன் நந்தவனத்தில் தொடர்ந்து திருடி வந்தான். இதனால், சாரமா முனிவரின் சிவபூசை தடைபட்டது. அவர், மன்னனிடம் சொல்லியும் அவன் கண்டுகொள்ளவில்லை. வருந்திய முனிவர், சிவனிடம் முறையிட்டார்.

அவருக்காக சிவன், மன்னனின் அரசவை இருந்த திசையை நோக்கித் திரும்பி, உக்கிரப்பார்வை பார்த்தார். இதனால் அப்பகுதியில் மண் மழை பொழிந்தது, தவறை உணர்ந்த மன்னன், சிவனை வேண்டி மன்னிப்பு பெற்றான். இவ்வாறு தவறு செய்பவர்களைத் தண்டிப்பவராக இத்தலத்து இறைவன் அருளுகிறார். செவ்வந்தி மலர் படைத்து வழிபடப்பட்டவர் என்பதால் இவருக்கு, 'செவ்வந்தி நாதர்' என்ற பெயரும் உண்டு.

**சுவாமி முன்னே, கொடிமரம் பின்னே:** கோயில்களில் சிவன் சன்னதிக்கு எதிரில்தான் கொடிமரம் இருக்கும். ஆனால், இக்கோயிலில் சிவனுக்கு பின்புறம் கொடிமரம் இருக்கிறது. முன்பு இக்கோயிலில் சிவன் சன்னதி, கிழக்கு திசையை நோக்கி இருந்தது. எனவே, பிரதான வாசலும், கொடிமரமும் கிழக்கு திசையில் அமைக்கப்பட்டது. சாரமா முனிவருக்காக, மன்னனைத் தண்டிக்க சிவன் மேற்கு திசை நோக்கித் திரும்பி விட்டதால், சன்னதி வாசலும், கொடி மரமும் அங்கேயே நிலைத்து விட்டது. சிவனுக்கு பூசையின்போது சன்னதிக்குப் பின்புறத்தில்தான் (கிழக்கு திசையில்) முழவிசை வாசித்து, திருமுறை ஓதுகின்றனர்.

**தாயும் ஆனவர்:** தனகுத்தன் என்ற வணிகன் இவ்வூரில் வசித்தான். கருப்பிணியான அவனது மனைவி, உதவிக்கு தாயை அழைத்திருந்தாள். தாயும் அவளது வீட்டிற்கு கிளம்பி வந்தாள். வழியில் காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்ததால், அவளால் வீட்டிற்கு வரமுடியவில்லை. இதனிடையே, அவளுக்கு பிரசவ வலி உண்டானது. தன்னைக் காக்கும்படி திரிசிராநாதரிடம் வேண்டினாள் இரத்தினாவதி. அப்போது, சிவன் அவளது தாயின் வடிவில் சென்று, பிரசவம் பார்த்தார். காவிரியில் ஒரு வாரம் வரையில் வெள்ளம் ஓடவே, அதுவரையில் சிவன், தாயின் இடத்திலிருந்து அப்பெண்ணிற்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தார். வெள்ளம் வடிந்தபிறகு, இரத்தினாவதியின் தாய் வீட்டிற்கு வந்தாள். உண்மை உணரப்பட்டதும், இரத்தினாவதி இறைவனை நினைந்து மனமுருகினால், தாயாக இருந்து அருளியதால் இவர், 'தாயுமானவர்' என்று பெயர் பெற்றார்.

**உச்சிப்பிள்ளையார்:** திருச்சி என்றாலே உச்சிப்பிள்ளையார் தான் நினைவிற்கு வருவார். இவர் இத்தலத்தில் கோயில் கொண்டிருக்கிறார். அயோத்தியில் இராமபிரான் பூசித்த, இரங்கநாதரை பெற்ற விபீஷணன், இலங்கைக்குக் கொண்டு



சென்றான். வழியில் இங்கு பெருமாளை வேண்டி பூசை செய்ய எண்ணினான். இராமர், இரங்கநாதர் சிலையை வழியில் வைக்கக்கூடாது என நிபந்தனை விதித்திருந்ததால், விபீஷணன் அங்கு சிறுவன் வடிவில் வந்த விநாயகரிடம் சிலையைக் கொடுத்து விட்டுச் சென்றான். விநாயகர், விபீஷணன் வரும் முன்பாக அச்சிலையை கீழே வைத்துவிட்டார். நீராடியபின்பு வந்த விபீஷணன் கோபம் கொண்டு, சிறுவனை விரட்டிச் சென்றான். இங்கு மலை உச்சிக்குச் சென்ற விநாயகர், சுயவடிவம் அருளினார். இவர், 'உச்சிப்பிள்ளையார்' என்று பெயர் பெற்றார். விநாயகர் சதுர்த்தி விழா இவருக்கு 10 நாட்கள் விமரிசையாகக் கொண்டாடப்படும்.

**சுகப்பிரசவ வழிபாடு:** மட்டுவார்குழலி அம்மை தனிச்சன்னதியில் இருக்கிறாள். இவளுக்கு சுகந்த குந்தளாம்பிகை என்றும் பெயருண்டு. வாசனையுடைய கூந்தலை உடையவள் என்பது இதன் பொருள். கருப்பிணிப் பெண்ணின் வீட்டிலிருந்து யாராவது ஒருவர் வந்து, இந்த அம்பிகைக்கு 21 கொழுக்கட்டை, 21 அப்பம் படைத்து, ஒரு துணியில் மஞ்சள், குங்குமம், வெற்றிலையை கட்டி அர்ச்சனை செய்து வழிபடுகிறார்கள். இதனால், சுகப்பிரசவம் ஆகும் என்பது நம்பிக்கை.

**வாழைத்தார் வழிபாடு:** கோயில்களில் சுவாமியிடம் வேண்டிக்கொள்பவர்கள் சர்க்கரைப்பொங்கல் அல்லது ஏதாவது ஒரு சாதத்தை படைத்து வேண்டிக்கொள்வார்கள். ஆனால், குழந்தை வரம் கிடைக்கவும், சுகப்பிரசவம் ஆகவும் இத்தலத்தில் தாயுமானவருக்கு வாழைத்தார் படைத்து, பாலால் திருமஞ்சனம் செய்து வழிபடுகிறார்கள். வாழை மரம், எப்போதும் அழிவில்லாமல் தழைத்துக் கொண்டே இருக்கும் தன்மையுடையது.

(05ஆம் பக்கம் பார்க்க)



சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 21 221 2739 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வாழையடி வாழையாக குடும்பம் தழைக்க வேண்டுமென்பதன் அடிப்படையில் இவ்வாறு படைக்கிறார்கள். வாழையை கருவறையில் வைத்து பூசித்து, பின்பு அதை பிரசாதமாகக் கொடுத்துவிடுகிறார்கள்.

**பிரசவம் பார்க்கும் சிவன்:** சித்திரைப் பெருந்திருவிழாவின் 5ம் நாளில், சிவன் இரத்தினாவதிக்கு பிரசவம் பார்த்த வழிபாடு நடக்கிறது. அன்று, சோமாக்கந்தர் அருகில் கருப்பிணிப்பெண் இரத்தினாவதியின் சிலையை வைக்கின்றனர். அப்போது, திரையிட்டு சிவன், இரத்தினாவதி இருவரையும் மறைத்துவிடுவர். இவ்வேளையில் இரத்தினாவதியின் மடியில் குழந்தை அமர வைத்து அலங்கரித்து, பின்பு திரையை விலக்கி தீபம் ஏற்றி காட்டுவர். இந்த வழிபாட்டின் போது, பிறந்த குழந்தைகளுக்குக் கொடுக்கும், மருந்து மற்றும் தைலமே பிரசாதமாக தரப்படும். இதைச் சாப்பிடும் பெண்களுக்கு சுகப்பிரசவம் ஆகும் என்பது நம்பிக்கை.

### திருத்தல வரலாறு

திருச்சிராப்பள்ளி மலையின் தோற்றம் பற்றி பல காரணங்கள் கூறுவர். ஆதியிலே 'திரிசிரன்' என்ற அசுரன் அரசாண்டு சிவனை வழிபட்டு வரம் பெற்ற இடம் என்பதால் இப்பெயர் வரப்பெற்றது என்றும், 'திரி' என்றால் மூன்று என்றும், மூன்று சிகரங்களை உடைய மலை என்பதால் 'திரிசிரபுரம்' என்றும் கூறுவர். 'பள்ளி' என்றால் இறைவன் உறையும் இடம் எனப் பொருள்படும். எனவே "திருச்சிராப்பள்ளி" என மருவி நிலைத்ததாகவும் கூறுவர்.

இவ்வாறு பல கதைகள் கூறப்பட்டாலும், புராண வரலாறு ஒன்றும் இதற்கு உண்டு. முன்பொரு சமயம் வாயு தேவனுக்கும் ஆதிசேடனுக்கும் யார் வலிமை மிக்கவர் என்னும் போட்டி ஏற்பட்டது. அவர்கள் இருவரும் தங்கள் வலிமைக்குப் போட்டியாக மேரு மலையின் ஆயிரம் சிகரங்களையும் ஆதிசேடன் தனது ஆயிரம் திருமுடிகளால் மூடிக் கொள்ளுதல் வேண்டும் என்றும், தன் வலிமையினால் வாயு ஏதேனும் ஒரு சிகரத்தைப் பெயர்த்து எடுக்க வேண்டும் என்பதும் போட்டி. போட்டியில் ஆதிசேடன் தன்னுடைய மணி முடியினால் மேருவை நன்றாக மூடிக்கொள்ள, வாயு தன்னுடைய முழுப் பலத்தையும் பயன்படுத்தியும் சிகரத்தைப் பெயர்க்க முடியாது போனதால் செயலற்று நிற்க, உயிர்கள் எல்லாம் உயிர்ப்பின்றித் தவித்தன. ஆதலால் தேவர்கள் ஆதிசேடனிடம் சென்று வேண்டினர். ஆதிசேடன் தனது சிரசைச் சற்றுத் தூக்க அவ்வேளை வாயு மேருவினின்று மூன்று சிகரங்களை எடுத்து வீசினான். அந்த மூன்றில் ஒன்றே



திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையாகும் என்று தலபுராணம் கூறுகிறது.

### திருக்கோயில் அமைப்பு

பழங்காலம் தொட்டுப் புகழ்பெற்று விளங்கும் திருச்சிராப்பள்ளியில் நடுநாயகமாக அமைந்து விளங்குவது "சிராமலை" ஆகும். இங்கே காவிரிக்கு அருகே ஒரு பாறையிலான தாயுமானவர் மலையும், மலை அடிவாரத்தின் தென்புறம் மாணிக்க விநாயகர் திருக்கோயிலும், உச்சியில் உச்சிப் பிள்ளையார் கோயிலும் என 3 பகுதிகளை உடையது. இம்மலையின் அடிவாரத்தில் விநாயகர் கோயில் ஒன்று உள்ளது. இது மாணிக்க விநாயகர் கோயில் என அழைக்கப்படுகிறது. இவ்வாலயம் உச்சிப் பிள்ளையார் கோயிலுக்கு மலையேறிச் செல்ல இயலாதவர்களுக்காக சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுப்பப் பெற்றதாகும். இங்கு வீற்றிருக்கும் மாணிக்க விநாயகர் எந்நேரமும் சந்தனக் காப்புடனும், வெள்ளிக் கவசத்துடனும் காட்சி தருகிறார். மாணிக்க விநாயகரைத் தொழுது வலம் வந்து படியேறிச் சென்றால் நாம் தாயுமானசுவாமி சந்நிதியை அடையும் முன்னர் மௌன சுவாமிகள் கட்டளை மடம் வருகின்றது. அதனைக் கடந்து மேல் ஏறும்போது நூற்றுக்கால் மண்டபத்தையும் அதைத் தொடர்ந்து ஏறிச் சென்றால் மலையின் மத்தியில் தாயுமானவர் திருக்கோயிலையும் அடையலாம்.

தாயுமானசுவாமி கோயில், மலையைக் குடைந்து கற்பாறைகளின் மீது கற்சுவர்களைக் கோட்டை மதில் போன்று எழுப்பி, கீழ் மேல் என இரு மாடங்களுடன் கட்டப்பட்ட கோயிலாகும். உட்புறத்தில், கருவறையில் மூலவர் ஆவுடையாரிலும் பெரிய, சிவலிங்கத் திருமேனியுடன் காட்சி தருகிறார்.

கருவறை முன் (அர்த்த மண்டபத்தில்) பித்தளைக் கவசமிடப்பட்ட நந்தி பலி பீடம், கொடிமரம் உள்ளன. கீழ் மாடத்தில் வடகிழக்குப் பகுதியில் கருவறை விமானத்தை வெகு அருகில் நின்று வழிபடக் கூடிய வகையில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் திருச்சுற்று மண்டபத்தின் நுழைவாயிலில் சுவாமி கருவறையின் பின்புறம் உள்ளது. மேற்குப் புறத்தில் செவ்வந்தி விநாயகர் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறார். வடக்குப் புறமாக முத்துக்குமார சுவாமி, நடராசர் ஆடல்த் திருமேனிகள் தெற்கு நோக்கி எழுந்தருளப் பெற்றுள்ளன.

கீழ் மாடத்தில் உள்ள அம்மன் கோயிலுக்குச் செல்லும் வழியில், திருமகளின் தனிக்கோயில் உள்ளது. கீழ் மாடத்தில் அம்பாள் கருவறையில் மட்டுவார் குழலியம்மன் வீற்றிருக்கிறார். இவர் நான்கு திருக்கரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிக் காட்சி தருகிறார். இத்திருச் சுற்றிலே சண்டேசுவரர், பள்ளியறை முதலான பல சந்நிதிகள் உள்ளன. இங்குள்ள ஒன்பான்கோள் (நவக்கிரக) மேடையில் கதிரவன் தம் தேவியருடன் நடுவிலும், அவரை நோக்கிய மற்றக் கோள்களும் எழுந்தருளப் பெற்றுள்ளன.

மலைக்கோட்டையின் மேற்கில் சோமரோண தீர்த்தம் என்ற பெயரில் நீராழி மண்டபம், நடுமண்டபம் இவற்றுடன் கூடிய தெப்பக்குளமும் உள்ளது. மலையடிவாரத்தின் தென்புறத்தே குகைக்கோயில் ஒன்று உள்ளது. இது மிகப் பழமையானது. இதன் வடபுறச் சுவரில் தெற்கு நோக்கி கணபதி, சிவபெருமான், அம்பாள், நான்முகன், கதிரவன் முதலான சிற்ப உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. குகையின் மேற்குப் புறத்தில் திருமேனி கருவறை ஒன்று உள்ளது. இக்குகைக்கோயில் சிற்பக் கலை மலிந்த இடமாகத் திகழ்கிறது. இங்குள்ள கங்காதரர் சிற்பம் என்பது, சிவபெருமானே! நேரில் நின்று காட்சி அளிப்பது போல் உள்ளது. மகுடத்தினின்று பிரவகிக்கும் கங்கையைத் தாங்கிய வண்ணம் உள்ளது. இக்காட்சி ஒரு கரத்தில் கண்டிகை (உருத்திராக்கம்) மாலையும், மற்றொரு கரத்தில் முப்புரிநூல் (பூநூல்) அணிந்தவாரும் உள்ளது. இரு நாகத்தின் தலையும் இருக்கின்றன. கீழே நான்கு அடியார்கள் துதி செய்த வண்ணம் உள்ளார். இவ்வாறு பல திறப்பட்ட சிற்பங்களை இங்குக் காணலாம்.

இக்கோயிலின் சித்திரங்களும் சிறப்பானவை. இத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவன் தாயுமானசுவாமிகள் என அழைக்கப்படுவதற்கான காரணத்தை அழகிய சித்திரமாக எழுதி இருப்பது குறிப்பிடத்தக்கது.

சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி !

திருச்சிற்றம்பலம்

# கணபதிபாளையத்தில் சிறப்பாக நடைபெற்ற அருள்மிகு திருவீழியழகர்...



அப்பர் சுவாமியின் அற்புதங்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2010ம் ஆண்டில் பவானி சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் சிவத்திரு.அ.தியாகராசன் ஐயா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் படி திருநாவுக்கரசு பெருமான் பெயரில் சிறிய அளவில் மீண்டும் மடம் துவக்கப்பட்ட நிலையில், பெருமான் திருவருளும் அப்பர் பெருந்தகை குருவருளும் உணர்த்த நாவுக்கரசு பெருமானின் உற்சவத் திருமேனி செய்யப்பட்டு வழிபாட்டுக்கு மடத்தை வந்தடைந்தது.

திருநாவுக்கரசு பெருமானின் தேவாரத்தை அடியார் பெருமக்கள் மடத்திலேயே தங்கி இருந்து முற்றும் ஓதி வழிபாடு செய்யும் பெரும் பேறு வாய்க்கபெற்றது. தொடர்ந்து சித்திரை மாதம் சதய நட்சத்திரத்தில் அப்பர் பெருமான் இறைவனோடு கலக்கும் ஐக்கிய காட்சி நிகழ்ச்சியும் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. மீண்டும் திருவருள் உணர்த்த தர்மபுரி மாவட்டத்தில் இருந்து சிவலிங்கத் திருமேனி தருவிக்கப்பட்டு வீழியழகர் என்றும் திருநாமத்துடன் பெருமான் திருமேனி நிறுவப்பட்டு (14/04/2017) திருவள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 1 அன்று திருக்குட நன்னீராட்டுச் செய்யப்பட்டது.

இவ்வாறு அடியார்கள் தொடர்ந்து அப்பர் தேவாரத்தை விடாமல் ஓதி குருபூசை விழா சிறப்பாக நடைபெற்ற நிலையில் கடந்த ஆண்டு திருநாவுக்கரசு பெருமானின் கல் திருமேனியும் மடத்தில் நிறுவும் பெரும் பேறு கிட்டியது.

வருடா வருடம் நாவுக்கரசு பெருமானின் தேவாரம் முற்றோதல் நிகழ்ச்சியும் அப்பர் பெருமான் ஐக்கிய காட்சியும் மிக மிக பொழிவோடு நடைபெற்ற நிலையில் கணபதிபாளையம் கிராமமும் சுற்றியுள்ள கிராமங்களும் தவறாது மழை வளம் பெற்று உன்னத நிலை அடைந்து ஊர் மக்கள் மகிழ்ச்சியோடு தங்களது விவசாயம் உள்ளிட்ட பணிகளை செய்து வந்தனர்.

இப்படி 11 ஆண்டுகள் முடிந்து 12-ம் ஆண்டில் அடி எடுத்து வாய்த்த நிலையில் வீழியழகர் பெருமானுக்கும், அப்பர் பெருந்தகைக்கும் சிறப்பான மடத்தை அமைக்க இறைவன் உணர்த்த கடந்த சில மாதங்களாக புதிய திருமடம் அமைக்கும் பணி நடைபெற்று கடந்த (22/04/2022) திருவள்ளுவராண்டு 2053 சித்திரை மாதம் 9ம் நாள் அடியார்கள் புடைசூழ குடமுழுக்கு விழா மிக சிறப்பாக நடைபெற்று அதைத்தொடர்ந்து குருபூசை விழாவும் இனிதே நடைபெற்றது.

கடந்த 12 ஆண்டுகளாக குருபூசை விழா மிகச்சிறப்பாக ஆண்டுக்கு ஆண்டு பொழிவு பெற்று நடந்து வந்த நிலையில் திருவருளும் குருவருளும் எங்களது வாழ்விலும் மிக சிறப்பான மாற்றங்களை தந்தது என்றால் மிகையல்ல.

புதிய திருநாவுக்கரசர் மடத்தினை கோவை கட்டிட வடிவமைப்பாளர் சிவத்திரு.வெங்கடாசலம் அரவிந்தன் அவர்கள் மிகவும் அருமையாக வடிவமைத்திருக்கிறார். அத்துடன் இந்தப் புதிய அப்பர் சுவாமி மடத்திற்கான பெருமளவான நிதியினை கணபதிபாளையம் சிவத்திரு. ஈசுவரமூர்த்தி பர்வதம்மாள் தம்பதியினரின் தவப்புதல்வர் சிவத்திரு. முத்துகுமார் ஐயா அவர்கள் வழங்கியிருந்தார்.

இந்த மடத்தினுள் அப்பர் சுவாமிகளின் அற்புதங்கள் ஓவியமாக வடிவமைக்கப்பட்டு உயரிய சுவர்களை



கொடையாளர் சிவத்திரு.முத்துக்குமார் ஐயா

அலங்கரிக்கின்றன.

தமிழகம் வரும் அடியார் பெருமக்கள் அனைவரும் மடத்திற்கு எழுந்தருள கணபதிபாளையம் ஊர் மக்கள் சார்பாக திருவடிகளை வணங்கி வேண்டுகிறோம்.

வீழியழகர் திருவடி போற்றி !!

திருநாவுக்கரசு நாயனார் திருவடி போற்றி !!

# சைவ ஆதீனங்களின் ஈழத்துத் திருத்தல யாத்திரை


ஈழத்துச் சிதம்பரம்


கன்னியா வெந்நீரூற்று


கீரிமலை புனித தீர்த்தம்


திருக்கோணேச்சரம்


மண்கும்பான் வீரகத்தி விநாயகர் திருக்கோயில்


தொண்டைமானாறு செல்வச்சந்நிதி


மாவிட்டபுரம் கந்தசுவாமி திருக்கோயில்


முழங்காவில் செல்வயோக சித்தி விநாயகர் திருக்கோயில்


முறிகண்டிப் பிள்ளையார் திருக்கோயில்


நயினை செம்மணத்தம்புலம் வீரகத்தி விநாயகர் திருக்கோயில்


நல்லூர் கந்தசுவாமி திருக்கோயில்

# சைவ ஆதீனங்களின் ஈழத்துத் திருத்தல யாத்திரை





தெல்லிப்பழை கோயில்புலம்
அருள்மிகு சந்திரமௌளீசர் திருக்கோயில்



உவர்மலை விவேகானந்தா கல்லூரி
அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில்





அருள்மிகு மருதடி விநாயகர் திருக்கோயில்





அருள்மிகு விசுவேச விநாயகர் கோயில்


அருள்மிகு நயினை நாகபூசணி அம்மன் திருக்கோயில்











# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு சித்தானைக்குட்டி சுவாமிகள்

(சித்தானைக்குட்டிச் சுவாமிகள் சென்ற திங்கள் தொடர்ச்சி)

### மௌனானந்த சுவாமிகள்

பழனிமலை அடிவாரத்தில் இருந்து நீண்டகாலம் தவத்தை மேற்கொண்ட மௌனானந்த சுவாமிகள் கதிர்காம முருகனைத் வணங்குவதற்காகக் கதிர்காமம் வந்திருந்தார். இந்தியாவில் கயிலாயம் முதல் கன்னியாகுமரி வரை யாத்திரை செய்தாலும் கதிர்காம முருகனைத் வணங்கினால்தான் அந்த யாத்திரை பூரணமானதாகக் கருதப்படும். மௌனானந்த சுவாமிகள் சில நாட்களாவது கதிர்காமத்திலிருந்து தவம் செய்து தவசித்தி பெறும் நோக்கமாகவே வந்திருந்தார்.

சுவாமிகள் கவர்ச்சியான தோற்றம் உடையவர். ஒருமுறை பார்த்தவர்கள் அவர் திருவுருவை எந்தநாளிலும் மறக்க முடியாது. அவர் காவியுடை தரிப்பதில்லை. பால்போல் வெள்ளை நிறமுடைய 1703 மல்வேட்டியே உடுப்பார். ஐந்து முழம் வேட்டியாக உடுப்பார். இரண்டு முழத்தில் கட்டைக்கால் சட்டை தைத்துப் போடுவார். ஒரு முழத்தில் கோவணம் அணிவார். தினமும் அதிகாலையில் குளிக்கும் போது உடைகளைத் தோய்த்து உலரவிடுவார். அதனால் அவருடைய உடை எந்த நேரத்திலும் தூய்மையாகவே காணப்படும்.

சாண்டோ சங்கரதாஸ் அவர்கள் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். ஆள் சாண்டோவாக இருந்தாலும் அவரது உள்ளம் எந்த நேரமும் சாதுக்களைச் சுற்றியே வட்டமிடும். கதிர்காம ஆடிவிழாவிற்குத் தவறாது செல்வார். ஆடிவிழாவின்போது மௌனானந்த சுவாமிகளை கண்டு வணங்கினார். மௌனானந்த சுவாமிகள் மௌனமாய் இருந்தாலும் இருவரது உள்ளங்களும் பேசிக்கொண்டன. சங்கரதாஸ். மௌனானந்த சுவாமிகளை மட்டக்களப்புக்கு அழைத்து வந்தார்.

சித்தானைக்குட்டி சுவாமிகள் கிழக்கு மாகாணத்தில் பிரபல்யம் பெற்றிருந்த காலம். சித்தானைக்குட்டி சுவாமிகள் கள்ளுக் குடிப்பார். இறைச்சி தின்பார் என்று சிலர் மௌனானந்த சுவாமிகளிடம் கூறுவார்கள். அவர் புன்முறுவல் பூத்தவராய், அவர் செய்கிறாரே என்று நாமும் அதைச் செய்யலாகாது. மகான்கள் ஏதோ கருத்துக் கொண்டு செய்கிறார்கள். அவர்கள் புலாலை மணம் வீசச் செய்வார்கள். இறந்தாரை எழுப்புவார்கள். நோயாளியைத் தமது பார்வையினாலேயே எழுந்து உலாவச் செய்வார்கள். ஆதலால் அவர்கள் சாப்பிடுகிறார்களே என்று நாம் சாப்பிடுவது பிழை எனக் கூறினார்கள்.

சுவாமிகள் ஒரு முருக பத்தர். கந்தசஷ்டி கவசம், கந்தர் அனுபூதி, கந்தரலங்காரம் போன்ற நூல்களைத் தினமும் பாராயணம் செய்பவர். ஒரு முறை சில அன்பர்கள் சென்றிருந்தனர். அதில் ஒரு அன்பர் கந்தசஷ்டி கவசம் வைத்திருந்தார். அதில் ஒரு பகுதியை எடுத்து அப்பகுதியை வாசிக்குமாறு சைகை செய்தார்.

"அட்டலட்சுமிகளில் வீரலட்சுமிக்கு விருந்துணவாகச் சூரபத்மாவை துணித்த கையதனால் இருபத்தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும் சின்னக் குழந்தை சேவடி போற்றி"

என்பதே அப்பகுதியாகும். அப்பகுதியை மும்முறை வாசிக்கச் செய்து வந்தவர்களை ஆழ்ந்த தியானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஒரு மந்திரத்தையோ, ஒரு பாடலையோ, ஒரு புத்தகத்தையோ, செபத்தின் மூலமும், பாராயணத்தின் மூலமும் தனக்கு ஆக்கிக் கொள்பவன் அசாதாரண சத்தியைத் தனக்குத் தேடிக் கொள்ளுகின்றான். இந்நிலையை மௌனானந்த சுவாமிகளிடம் காண முடிந்தது. தியானம் கலைந்த பின் சுவாமிகள் நிலத்திலே பின்வரும் வசனங்களை எழுதிக்காட்டினார்கள்.

**"உன்னிடத்திலுள்ளதை இல்லையென்னாமல் மற்றவர்களுக்குக் கொடு."**
**"எங்கும் அலையாதே, இருந்தபடியே இரு."**
**"கோபத்தை விடு. முருகன் அருள்தானேவரும்!"**

அங்கு சென்றவர்களுக்குச் சுவாமிகள் அன்று அருளிய அருள் வாக்கு இதுவாகும். தம்மை நாடி வருவோருக்கு மிக எளிய உபதேசங்களையே சுவாமிகள் செய்தார்கள். காரணம், உபதேசம் பெறும் மக்கள் அவற்றைத்தானும் செயலில் கொண்டு வருவதில்லை. சுவாமிகளை ஒருமுறை வணங்கிய உடனேயே கடவுளைக் கண்டுவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஒருவன் தனது சுயசாதனையினாலேயேதான் முன்னேற முடியும். குருமார் வழிகாட்டிகளாக மாத்திரம்தான் இருப்பார்கள்.

"அதிகாலை நித்திரை விட்டுஎழு, எழும்போதே ஆண்டவனை நினை, காலைக்கடன்களைக் குறைவறச் செய், தேநீர் காப்பியைத் தூரத்தள்ளு, மரக்கறி உணவு மனதிற்கு மகிழ்ச்சி, பசித்து வந்தோர் முகம்பார், உண்ணும்முன்பு ஒருகணம் இறைவனை நினை, கடமையில் தவறினால் கடவுளைக் காணமாட்டாய், நெற்றிக்கழகு விபூதி பூசுதல், படுக்கைக்குமுன்பு இறைவனைப் பிரார்த்தி."

இவை எவ்வளவு இலகுவான அருள் வாக்குகள். இவற்றை வாசிக்கும் போதே இவற்றில் என்ன இடர் உண்டு என்று சொல்லத்தோற்றும். ஆனால் இவற்றில் ஒன்றையும் ஒழுங்காகக் கடைப்பிடித்திருக்க மாட்டோம். மகான்களுடைய தரிசனையினாலே எமது சோம்பல் நீங்கி ஒரு புத்துணர்வு தோன்றுகிறது. சாதனையாளன் ஒருவன் அடிக்கடி சாதுக்களின் தரிசனம் பெறுவதனால் தனது சாதனையில் எதிர்பாராத முன்னேற்றத்தை அடைகின்றான்.

மௌனானந்த சுவாமிகளை வணங்குபவர்கள், சித்தானைக்குட்டிகளையும் வணங்கச் செல்வார்கள். இருவரும் இருவேறு எதிர்த்திசைகள். ஆனால் அடையும் இடம் ஒன்றுதான். இதனை இரு சுவாமிகளுமே உணர்ந்திருந்தார்கள். இரு சுவாமிகளும் ஒருவரை ஒருவர் சந்தித்ததில்லை. அவர்கள் சந்திக்க வேண்டுமென்று சங்கற்பம் செய்து கொண்டதுமில்லை. 1939-ஆம் ஆண்டில் சுவாமிகள் சமாதி அடைந்து ஆலையடிச் சோலையில் சமாதி வைக்கப்பட்டார்.



### மிளகாய்ச் சாமியார்

இவர் சித்தாண்டி முருகன் சந்நிதியில் நீண்ட காலம் தவம் புரிந்து வந்தார். இவர் பூர்வாச்சிரமத்தில் ஈச்சிலம்பத்தை ஆசிரியராக இருந்தார். பொருள் பண்டம் உடையவர். ஒரு கடை வைத்து வியாபாரமுஞ் செய்து வந்தார். வேளாண்மைச் செய்கையிலும் ஈடுபடுவார். இருபாதங்களும் சப்பையானவை. ஏதோ ஒரு பழைய ஏடு கிடைத்தது. அதில் திருவைந்தெழுத்து சக்கரம் இருந்தது. அதில் கண்டவாறு ஒரு பலகையில் எழுதினார். தினமும் தியான செபத்தில் மும்மரமாக ஈடுபடலானார். உரு ஏறத் திரு ஏறும் என்று சொல்லுவார்கள். வீட்டை மறந்தார். எல்லாப்பற்றும் கழன்றது. சித்தாண்டி முருகன் சந்நிதியிலே தொடர்ந்து வசிக்கலானார்.

உற்றார் உறவினர் வந்தனர். அவர்களை கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. தியானத்தில் லயித்தார். தியானசித்தி பெற்றார். யாராவது சாப்பாடு கொண்டுவந்து கொடுத்தால் சாப்பிடுவார். சுவாமிக்கு என்ன வேண்டும் என்று கேட்டால் மிளகாய்த் துவையல் வேண்டும் என்பார். மிளகாயை அப்படியே அரைத்துக் கொண்டுவரத் தலைப்பட்டனர். அவற்றை அப்படியே விழுங்கிவிடுவார். சிலசமயம் உடலெல்லாம் மிளகாயைப் பூசி வெயிலில் இருப்பார். மக்கள் வேடிக்கை பார்ப்பர். மிளகாயை விரும்பிச் சாப்பிட்டபடியால் அவரது சொந்தப் பெயர் மறைந்து, மிளகாய்ச் சாமியார் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

ஒரு சாக்கினுள்ளே இரு கால்களையும் செலுத்திக்கொண்டு தெரு ஓரத்திலேபடுத்து உறங்குவார். கோயில் குருக்களையும் மற்றும் சிலரையும் வாய்க்கு வந்தபடி ஏசுவார், திட்டுவார். இவ்வன்சொற்களைப் பொறுக்கமாட்டாதவர்கள் தடி கொண்டு அடிப்பர். சிரித்த முகத்தோடு அவற்றை எல்லாம் பொறுத்துக் கொள்வார். ஒருநாள் ஒரு தடியன் சுவாமிகளைத் துடிக்கப் பதைக்க அடித்தான்.

"நல்லாய் அடிபடு. நீ செய்தவினை துலைய வேண்டாமா? அவனுடைய சூட்டுக்கு நெருப்பு வைத்தாய் அல்லவா? அவன் குடும்பம் பசியால் வாடியதைக் கண்டு மகிழ்ந்தாய் அல்லவா? அப்படிச் செய்தாய் அல்லவா? இப்படிச் செய்தாய் அல்லவா? ஆமாம் போடு, போடு நல்லாய்ப்போடு". அடித்தவன் குண்டனாயிருந்தாலும் களைத்துவிட்டான். அடி ஒய்ந்தது. அவனுக்கு ஒரு தீர்க்கதரிசனமும் கூறினாராம்.

"என்னப்பா போதுமா? நாலாம் சந்தியிலே சட்டைக்காரன் தொப்பிக்காரன் வருவான், கீறுவான் கிளிப்பான்." இவ்வார்த்தைகளைக் கேட்டவனுக்கு உள்ளூரப் பயம் தொட்டுவிட்டது. ஆனால் அவனது மமதை சுவாமியிடம் மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டது. சில நாட்களுக்குப்பின் அக்கொடிய மனிதன் வேறொரு உலுத்தனால் குத்தப்பட்டுச் சந்தியிலே விழுந்து கிடந்தான். தேடுவாரற்றுக் கிடந்தான். அவனுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர்விட ஆளில்லை. பிரேத பரிசோதனை நடத்திய பின் அரசாங்கத்தின் செலவிலேயே அடக்கம் செய்யப்பட்டான்.

மிளகாய்ச் சுவாமியார் சித்தானைக்குட்டிச் சுவாமிகளைச் சந்திக்க வந்திருந்தார். கையில் ஒரு உலக்கையுடன் காளியின் ஆவேசத்தோடு, மிளகாய்ச் சாமியாரைத் துரத்திக்கொண்டு வந்தார். மிளகாய்ச் சாமியார் ஒரு ஈர்க்கை உயர்த்தி "என்னடி உலக்கையா" என்று கூறினார். உடனே சுவாமிகளின் ஆவேசம் தணிந்து உலக்கையைக் கீழேபோட்டு மிளகாய்ச் சாமியாரைத் தழுவிக் கொண்டார். சில நாட்கள் அங்கிருந்தபின் பழனிக்குச் செல் என்று சுவாமிகளுடைய கட்டளை பிறந்தது.

பழனிக்குச் செல்லுமுன் யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். அங்கே சடைவரத சுவாமிகளுடைய மடத்திற்குச் சென்றார்.

அங்கும் சோதனை நடைபெற்றது. அச்சோதனையிலும் வெற்றிபெற்று, 1001 இளநீர்களை தமது தலையிலே தாமே அடித்து அபிசேகம் செய்துகொண்டார். அதன்பின் பழனிக்குச் சென்று அங்கு சிலகாலம் வசித்து அங்கேயே சமாதி அடைந்தார்.

### சுவாமி விபுலானந்தர்

கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்றொரு ஊர் இருக்கிறது என்பதை உலகறியச் செய்த பெருமை சுவாமி விபுலானந்த அடிகளாருக்குரியதாகும். சாதுக்கள் உலகத்தில் காரைதீவை உதிக்கும் சூரியனாக்கிய பெருமை சித்தானைக் குட்டி சுவாமிகளைச் சேர்ந்ததாகும். சித்தானைக்குட்டி சுவாமிகளுக்கு சுவாமி விபுலானந்த அடிகளார் மீது தனி ஒரு மதிப்பும் அன்பும் இருந்து வந்தது. ஆனால் சித்தானையின் அருளாட்டங்களைச் சுவாமி விபுலானந்தரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒருநாள் நண்பகல் நேரம் சித்தானைக்குட்டி சுவாமிகள் கல்முனை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை ஒழுங்கையால் சென்று கொண்டிருந்தார். பாடசாலை வாயிலை அடைந்ததும் பாடசாலைக்குட் புகுந்தார்.

"சாமியாரே, நாய் கட்டியிருக்கா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே சென்றார்கள். சுவாமி விபுலானந்தருடன் நொத்தாரிசு இராஜேஸ்வர முதலியார் பேசிக்கொண்டிருந்தார். இருவரில் எவராவது சுவாமிகள் வாருங்கள் என்றோ, அன்றி எழுந்தோ, ஆசனம் கொடுத்தோ உபசரிக்கவில்லை. சுவாமிகள் தாமாகவே சென்று, சுவாமி விபுலானந்தர் இருந்த சாய்மனை நாற்காலியின் வலது பக்கத்துச் சட்டத்தில் உட்கார்ந்தார்கள்.

சுவாமிகள் விபுலானந்த அடிகளாரைப் பார்த்து. "நீ சாமி விதானையாரின் மகனல்லவா? உன் பெயர் மயில்வாகனம் அல்லவா? விபுலானந்தசுவாமி என்ற பெயர் எப்படி வந்தது? நீ சுவாமியா? என்றெல்லாம் கேள்விமேல் கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தார். கதிரைக் கையிலிருந்து இடையிடையே உன்னி உன்னி எழும்ப கதிரைக்கை ஒடிந்துவிழும்போல இருந்தது. அந்த நேரம் நொத்தாரிசார் எழும்பி "சுவாமி இந்த நாற்காலியில் உட்காருங்கள். சாய்மனைக் கதிரை கை ஒடியும் போல இருக்கிறதே" என்றார். சித்தானை சினந்து "டேய் உன் வேலையை நீ பார். என் வேலையை நான் பார்ப்பேன்" என்றார். பின்னர் சுவாமி இராமகிருஷ்ணரின் படத்தைப் பார்த்து, "இவன் என்ன பெரிய சாமியா" என்று தொடங்கினார்.

இவ்வளவு நேரமும் சித்தானையின் திருவிளையாடலை அமைதியாகப் பொறுத்துக் கொண்டிருந்த அடிகளார் கோபாவேசத்தரானார். "இவ்வளவு நேரமும் என்னைப் பற்றிச் சொன்னதையெல்லாம் பொறுத்துக் கொண்டேன். குருநாதனைப் பற்றி இகழ்ந்து சொல்வீர்களாயின் எனது பொறுமையை இழக்க நேரிடும். அதனால் சங்கடம் வரும்" என்றார்.

சித்தானை சிரித்துக் கொண்டு அமைதியாக எழுந்து "நாய் கட்டாதவன் சாமியாவதெப்படி? என்று கூறினார். விபுலானந்தரின் வலது பாதத்தில் உமிழ்ந்தார் சுவாமிகள். அந்தக் கணமே நொத்தாரிசு ஓடிச்சென்று தண்ணீர் கொண்டு வந்து அடிகளாரின் பாதங்களைக் கழுவினார். நாய் கட்டாதவன் என்று சுவாமிகள் குறிப்பிட்டது ஆணவத்தை அடக்காதவன் என்ற குறிப்பிலேதான்,

சுவாமிகள் உடனே வெளியேறினார். நேராகச் சிவபாதம் வித்தியாதரிசிகளின் வீட்டிற்குச் சென்றார். தனக்குச் சாராயம் வேண்டும் என்று கெட்டார். வித்தியாதரிசகர் தான் குடிப்பதில்லை என்றும் புலால் உண்பதில்லை என்றும் கூறினார். ஆனபடியினால் தான் உபயோகிக்காத ஒன்றை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாதென மறுத்துவிட்டார். சுவாமிகளும் கண்டிப்பாய்க் கேட்டார். அவரும் கண்டிப்பாக மறுத்துவிட்டார். ஈற்றில் சுவாமிகள் சாந்த வடிவமாய் நீ கட்டாயம் மதுவும் பாவிப்பாய் மச்சமாமிசமும் புசிப்பாய் என்று கூறிவிட்டு வெளியேறினார்.

சிவபாதம் அவர்கள் கல்முனையிலிருந்து மாற்றம் பெற்று கற்றனுக்குச் சென்றார்கள். அங்கே அவருக்கு டபிள் நிமோனியா வந்து மிகக் இடர்ப்பட்டார். இறைவன் திருவருளால் சுகம் பெற்றார். ஆனால் சித்தானையின் தீர்க்கதரிசனமும் நிறைவேறியது. மருத்துவரின் ஆலோசனையின்படி விறண்டியும் கோழிக்குஞ்சு விறாத்தும் பாவிக்க நேர்ந்தது.

விபுலானந்த அடிகளார் பாரிசவாத நோயால் வருந்த வேண்டிய காலம் வந்தது. கொழும்பில் அடிகளார் வைத்தியசாலையில் வேதனையுற்றிருந்த காலம் முழுவதும் சித்தானையும் மிக வருந்தியிருக்கிறார். அடிகளாரின் நோயை தாமே ஏற்று அனுபவித்திருக்கிறார். 'யாரோ ஒருவன் தன்னை வாளால் அறுப்பது போன்று சுவாமிகள் துடிதுடித்து இடர் உற்றார். அந்தக் காலத்தில் சுவாமிகளைப் பார்க்கச் சென்றவர்களிடம் தம்மை யாரோ வாளால் அறுத்துக் கொடுமைப்படுத்துகிறான் என்று சொல்லிக் கொண்டிருப்பார். அடிகளார் மறைந்ததும் சுவாமிகள் அனுபவித்த துன்பமும் நீங்கிவிட்டது. இதிலிருந்து சுவாமிகளுக்கு அடிகளார் மீதிருந்த அன்பும் மதிப்பும் நன்கு விளங்குகிறது. கலைகள் எல்லாம் கற்றாலும், சுவாமி வேடம் பூண்டாலும் நான் என்ற அகந்தை நீங்காவிட்டால் யாதும் பயனில்லை என்பதை விளக்கவே சித்தானை மேற்படி திருவிளையாடலை நடத்திக் காட்டினார்.

(சித்தனைக்குட்டிச் சுவாமி மீண்டும் வருவார்.)

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று- எம்பிரான் திருஞானசம்பந்தன்!





சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

### பொற்கிழி பெற்ற புகலி வேந்தர்:

திருவாவடுதுறையிலே ஆளுடைய பிள்ளையார் இறைவனை வணங்கி கொண்டிருக்கும் நாளிலே சிவபாத விருதயர் பிள்ளையாரை நோக்கி "நான் யாகஞ் செய்தற்கு ஆகுங்காலஞ் வந்து விட்டது. அது செய்யும்படி போதற்குப் பொருள் தரல் வேண்டும்" என்றார். பிள்ளையார் அதைக் கேட்டு திருக் கோயிலிற் சென்று வணங்கி,

**இடரினும் தளரினும் எனது உறு நோய்**
**தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்**
**கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை**
**மிடறினில் அடக்கிய வேதியனே.**
**இதுவோ எமை ஆளுமாறு?**
**ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்**
**அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே.**

என்னுத் திருப்பதிகம் பாடினார். அப் பொழுது பரமசிவனுடைய திருவருளி னாலே ஒரு பூதம் விரைந்து வந்து, பீடத்தின் மேலே ஆயிரம்பொன் பொருந்திய கிழியொன்று வைத்து, முன்னே நின்று "இந்தக்கிழி பொன் னுலவாக்கிழி: இது பரமசிவனால் உமக்கு அருளிச்செய்யப்பட்டது" என்று கூறி மறைந்தது. அப்பர் இவ்வற்புதத்தை,

**"கழுமல ஊரர்க்கு அம்பொன் ஆயிரம்**
**கொடுப்பர் போலும் ஆவடுதுறை அரனே"** என்று பாடியுள்ளார்.

பிள்ளையார் திருவருளை நினைந்து, வணங்கி எழுந்து கும்பிட்டு பீடத்தின் மேலே வைக்கப்பட்ட பொற்கிழியைச் சிரமேற் கொண்டு. தந்தையார் கையிற் கொடுத்து, பரமசிவனையே தலைவராக நினைந்து வேதவிதிப்படி செய்யப் படும் யாகத்தை நீருஞ் சீர்காழியில் இருக்கின்ற மற்றப் அந்தணர்களும் செய்ய, இக்கிழி குறையாது மிகும் என்று சொல்லி சீர்காழிக்குப் போகும்படி, அவ ருக்கு விடைகொடுத்து அனுப்பி, தான் திருவாவடுதுறையில் எழுந்தருளி யிருந்தார்.

### யாழிசைக்கு அடங்காப் பதிகம்:

சிலநாட்கள் சென்றபின் திருவாவடு துறையிலிருந்து அகன்று, திருக் கோழம்பம், திருவைகன்மாடக் கோயில், திருநல்லம், திருவழுந்தூர். திருத்துருத்தி, மாயூரம், திருச்செம் பொன்பள்ளி, திருவிளநகர், திருப்பறி யலூர், திருவேட்டக்குடி என்னுந் தலங்களைத் தரிசித்துக்கொண்டு, தருமபுரத்தை அடைந்தார். அந்தத் தருமபுரம் திருநீலகண்டப் பெரும்பாண ருடைய தாயார் பிறந்த தலமாதலால், அங்குள்ள அவருடைய சுற்றத்தார்கள் வந்து, எதிர்கொண்டு வணங்கித் துதித்தார்கள். அது கண்டு, திருநீலகண் டப் பெரும்பாணர், பிள்ளையார் அருளிச் செய்த அருமையாகிய திருப்பதிகங்களின் இசையைத் தாம் யாழில் இட்டு வாசிக்கப்பெற்ற பெரும் பேற்றை அவர்களுக்கு அருளிச்செய்தார். அவர்கள் அதைக் கேட்டு, **"நீர் திருப்பதிக விசையை அளவு பெற யாழிலே அமைத்து வாசித்தலினாலே உலக முழுதிலும் இசை விளங்குக"** என்றார்கள்.

உடனே பெரும்பாணர் மனநடுங்கி, பிள்ளையாருடைய திருவடி களை வணங்கி நின்று "சுவாமி! திருப் பதிகவிசை அளவுபடாத தன்மையை இவர்களேயன்றி உலகத்திலுள்ள மற்றை யாவரும் அறிந்து உண்மையை உணர்ந்து உய்யும் பொருட்டுத் தேவரீர் ஒரு திருப்பதிகம் பாடியருள்வீராகில், அடி யேன் அதனிசை யாழிலே அடங் காமையைக் காட்டப்பெறுவேன்" என்றார். அப்பொழுது பிள்ளையார் பரமசிவனை வணங்கிக்கொண்டு, திருப்பதிகத்தின் உண்மை பூமியிலுள் ளோருடைய கண்டத்திலும் யாழிலும் இசைநூலிற் கூறப்பட்ட இசை முயற்சி களினால் அடங்காமையைக் காட்டும் பொருட்டு, "மாதர் மடப்பிடி" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். திருநீல கண்டப் பெரும்பாணர் அத்திருப்பதிக விசையைத் தம்முடைய யாழ் நரம்பிலே முன்போல இட்டு வாசிக்கப் புக் அது அதனிடத்தே அடங்கிற்றில்லை.

அப்பொழுது திருநீலகண் டப்பெரும்பாணர் அதனை விட்டு அச்சங்கொண்டு பிள்ளை யாருடைய திருவடிகளிலே விழுந்து வணங்கி, எழுந்து. **"சுவாமி அருளிச்செய்த திருப் பதிகத்தினிசையை யாழிலே ஏற்பேன் என்று சொல்லப் பண்ணியது இந்த யாழன்றோ"** என்று அதனை உடைக்கும்படி ஓங்கினார். உடனே பிள்ளையார் தடுத்தருளி, **"ஐயரே! நீர் இந்த யாழை முரிப்பது என்னை! பரமசிவனும் பார்வதியம்மையாரும் அருளிச்செய்த திருவருளின் பெருமையெல்லாம் இந்தக் கருவியில் அளவுபடுமா! மனதினாலும் அளவுபடாத இசைப்பெருமை செய்கை யினால் அளவுபடுமோ! அளவு படாதே. நீர் இந்த யாழைக்கொண்டே சுவாமியுடைய திருப்பதிக விசையை இயன்றமட்டும் இதில் அமைத்து வாசியும்"** என்று சொல்லி, திருநீலகண்டப் பெரும்பாணர் கையிலே யாழைக் கொடுத்தருளினார். திருநீல கண்டப்பெரும்பாணர், பிள்ளையாரைத் தொழுது, யாழை வாங்கி, சிரமேற் கொண்டார்.

**குறிப்பு:** ஆறுமுக நாவலர் பெருமான் அருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தை அடிப் படையாகக்கொண்டு எழுதப்பட்டது.

**திருச்சிற்றம்பலம்**



# யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் மங்களநாதருக்கு சங்குநீராட்டு







கடந்த, கீழறை (பிலவ) ஆண்டு, மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 28ம் நாள் (11.04.2022) திங்களன்று கட்செவி (ஆயில்யம்) நாண்மீன், வளர்பிறை பதின்மைப் பிறைநாள், யோகர் சுவாமிகளினுடைய குருபூசை நன்னாளில், மாணவச் சிறார்களை சைவத்தமிழ் வழிபாட்டில் ஈடுபடுத்தும் நோக்கில், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் மங்களநாதப் பெருமானை

திருநிலைப்படுத்தி, திருக்குட நன்னீராட்டுச் செய்யப்பட்டது. தொடர்ந்து யாழ் இந்து மங்களநாதப் பெருமானுக்கு, கடந்த சித்திரைத் திங்கள் 9ம் நாள், வெள்ளிக்கிழமையன்று (22.04.2022) மாணவர்கள் புடைசூழ, இறைவன் திருவருளால் சங்கு நீராட்டும் சிறப்பாக இடம்பெற்றது.

தவத்திரு ஆதீன முதல்வர்கள் ஆசியுடன் திருக்குடமுழுக்குச் செய்யப்பட்ட மங்களநாதப் பெருமானின் திருவருளால் சங்குநீராட்டு நான்னாளில், அண்ணளவாக 150 மாணவச் சிறார்களுக்கு, தென்னாடு மடத்தினால் சைவ சமய நுழைவு தீக்கையும் வழங்கி வைக்கப் பட்டது.

யாழ் மண்ணிற்கு பல ஆக்கவியலார்களை கொடுக்கின்ற, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில், திருவாசகத்தில் முப்பத்தெட்டு இடங்களில் போற்றிப் பாடப்படுகின்ற, “மங்களநாதர்“ எனும் திருப்பெயருடன் நிலைகொண்டு, திருவருள் புரியும் எம் பெருமானை போற்றி வணங்குவோம்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**
**அம்மை அப்பனே போற்றி**
**ஞான குருவே போற்றி**
**சங்கம் அமர்ந்தவனே போற்றி**
**ஐம்பூத வடிவே போற்றி**
**அறிவைத் தருவாய் போற்றி**
**ஞானம் தருவாய் போற்றி**
**மங்களநாதரே போற்றி போற்றி**

**திருச்சிற்றம்பலம்**

# அருள்மிகு திருக்கேதீச்சரநாதர் குடநீராட்டை முன்னிட்டு பூர்வாங்க இயந்திரபூசை வைகாசி நிறைமதியில் இடம்பெற்றது







எதிர்வரும் ஆனி 22ம் (யூலை 6) நாள் வளர்பிறை எழுமைப் பிறைநாளில் திருக்குட முழுக்குக் காணவிருக்கும் மாந்தை கௌரி அம்மாள் உடனுறை அருள்மிகு திருக்கேதீச்சரநாதர் திருக் கோயிலில் இன்று நிறைமதி நாளன்று பூர்வாங்க இயந்திர பூசை நடைபெற்றது. இந்த இயந்திரங்கள் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பூந்துருத்தி அப்பர் சுவாமிகள் மடம்







காவிரிக்கரையில் திருப்பூந்துருத்தியில் அருள்மிகு பொய்யிலியப்பர் திருக்கோயிலுக்கு அருகில் அப்பர் பெருமான் திருமடம் அமைத்து இருந்து இறைவனை வழிபட்டார். அத்துடன் இங்கிருந்து பல தொண்டுகளைச் செய்துவந்தார். பொய்யிலியப்பர் கோயிலுக்கு செல்லும் அடியவர்கள் கண்டிப்பாக பார்க்க வேண்டிய இடங்களில் இந்த மடமும் ஒன்றாகும்.

# சிவபூமியில் சிவனைத் தேடி -

## தம்பிலுவில் - களுதாவளை அருள்மிகு சிவலிங்கப் பிள்ளையார் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



ஈழத்தின் கிழக்குப் பிரதேசத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள பழமைத் தமிழ்க் கிராமம் தம்பிலுவில் ஆகும். இக் கிராமம் திருக்கோவில் பிரதேசத்தில் எழுவான் கரையோரமாக இயற்கை எழில் கொஞ்சும் ஊராக அமைந்துள்ளது. இப்பழமை ஊரின் வரலாற்றை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், கண்டி மன்னன் காலத்து கண்ணப்பர் பாடிய மழைக்காவியம், திருக்கோயில் சித்திரவேலாயுதர் சரித்திரம், தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயில் வரலாறு, தம்பிலுவில் கல்வெட்டு, சாகாமத்து பிராமிச் சாசனம், ஒல்லாந்தர், பிரித்தானியர் காகித ஆவணங்கள் போன்றவற்றால் அறியமுடிகின்றது. இவ்வூரின் பத்திக்கும் சமூக சமயப் பண்பாட்டிற்கும் மூத்த கோயிலாக கண்ணகி அம்மன் கோயில் விளங்க வீரசைவமரபின் பண்பாட்டிற்கு களுதாவளை அருள்மிகு சிவலிங்கப் பிள்ளையார் கோயில் சிறப்புற்று விளங்குகின்றது.

### தல ஊரின் சிறப்பு

திருக்கோயில் பிரதேசப் பிரிவுகளில் ஒன்றான தம்பிலுவில் கிராமம் குறிஞ்சி, மருதம், நெய்தல், முல்லை என்னும் நானில அமைப்பாலும், கண்ணகிச் சடங்கு பாரம்பரியத்தாலும், நாட்டுமருத்துவம், நாட்டுக் கூத்துக்கலை, மாந்திரீகம் என்பனவற்றுக்கும் பேர் பெற்ற ஊராகவும் மிளிர்கின்றது. மட்டக்களப்பு பூர்வ சரித்திர நூலின் கூற்றுப்படி, திருக்கோயில் சித்திரவேலாயுதர் திருக்கோயிலை புனரமைத்த உன்னரசுகிரியின் அரசன் மனுநேயகஜவாகு அக்கோயிலின்



அண்மையில் தான் வெட்டிய குளத்திற்கு தன் தாய் தம்பதி நல்லாள் நினைவாக "தம்பதிவில்" எனப் பெயர் சூட்டினான். இப் பெயரே பின்னாளில் திரிபு பெற்று இன்று பேசப்படும் தம்பிலுவில் ஆனது என்கிறது. ஒல்லாந்தர், பிரித்தானியரின் ஆவணக் குறிப்புக்களில் இவ்வூரின் பெயர் "தம்பலிகுளம்", "தம்பிலி ஊர்" என்றே இனங்காட்டப்பட்டுள்ளது. இவ்வூரை அவ்வூர்க் கவிஞர்கள் "தண்பொழிலூர்" என்றும் வருணிக்கின்றனர்.

ஈழத்தீவின் பழங்குடிகளான நாகர்களின் தொல்குடியிருப்பு பகுதிகளை "நாகர்முனை" என்ற பெயரால் மட்டக்களப்பு பூர்வ சரித்திர நூல் செப்பும். அப் பகுதிகளில் திருக்கோயில் தம்பிலுவில் ஆகிய கிராமங்களும் அடங்கும். அதற்கேற்றால் போல் தம்பிலுவில்லை அண்டிய சாகாமம், கஞ்சிக்குடிச் சாறு போன்ற பழங்கிராமங்களிலும் கி.மு 1000-3000 காலப்பகுதிகளில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களின் சான்றுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக சாகாமத்திற்கு அருகில் உள்ள மொட்டையாகல் மலையில் எழுதப்பட்ட பிராமிச்சாசனம் கி.மு 3 ஆம் நூற்றாண்டில் இப் பகுதியை ஆட்சிபுரிந்த " உபராஜன் நாகன்" என்பவனைக் குறிக்கின்றது. எனவே சிவவழிபாட்டாளர்களான நாகர்கள் ஆட்சி புரிந்த பகுதியாக தம்பிலுவில் சிறப்பிடம் பெறுகின்றது.

கி.பி 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இப்பகுதி கோட்டை அரசின் அதிகாரத்தின் கீழ் இருந்த போது, கோட்டை மன்னன் ஆறாம் விஜயபாகுவினால் தாண்டியடிக்கு அருகே இருந்த ஏரியை கோயிலொன்றுக்கு தானமளிக்கும் செய்திகளைத் தாங்கி நிற்கும் சாசனமாக "தம்பிலுவில் கல்வெட்டு" காணப்படுகின்றது. இக்கல்வெட்டு முக்கியம் வாய்ந்ததாக இல்லாவிட்டாலும் இலங்கையில் அதிக ஆய்வாளர்களால் பார்வையிடப்பட்ட சிறப்பையும் பெறுகிறது.

### திருத்தல வரலாறு

தம்பிலுவில் கிராமம் ஈழத்து தொல்குடிகளான நாகர்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசமாகவும், வீரசைவர் செறிந்து வாழும் பிரதேசமாகவும் திகழ்வதனால் இங்கு சிவவணக்கம் மேன்மையுற்று விளங்கி வந்துள்ளமை என்பதில் வியப்பில்லை. இப் பிரதேசத்தில் தம்பிலுவில் உட்பட, தாழையடி, விநாயகபுரம் ஆகிய இடங்களில் சிவனுக்கு கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. மற்றும் தம்பிலுவில் சிவலிங்கப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நாடறிந்த காயத்திரி சித்தர் முருகேசு சுவாமி அவர்களால் உருவாக்கப்பட்ட காயத்திரி பீடமும், தபோவனமும் காட்சியளிக்கின்றது. அங்கு சிவபால யோகி மகராஜ் அவர்களால் உருவாக்கப்பட்ட காயத்திரி பீடமும், தபோவனமும் காட்சியளிக்கின்றது. அங்கு சிவபால யோகி மகராஜ் அவர்களால் புண்ணிய நதியான நர்மதையில் கிடைத்த மிகச் சத்தி வாய்ந்த பாசுபதேசுவரர் இலிங்கமும், சித்தர்களால் பூசிக்கப்பட்ட நெருப்பு இலிங்கமும் இங்குள்ள பிரதேச அடியவர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றன.

மட்டு நகர் களுதாவளை சுயம்பு இலிங்கப் பிள்ளையாரின் அருளாட்சியின் மறுவிம்பமாக அருள் சுரந்து கொண்டிருக்கும் அம்பாறை தம்பிலுவில் களுதாவளை அருள்மிகு சிவலிங்கப் பிள்ளையார் கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் கொண்டிருக்கும் ஓர் சிவாலயமாகும். இங்கு மூர்த்தியாக சிவலிங்கப்பிள்ளையாரும், மாதுமை அம்மாளும் விளங்க, அத்தி தல விருட்சமாகவும், எழுவான் சமுத்திரம் தீர்த்தமாகவும் சிறப்புப் பெறுகின்றது.

இத் திருத்தல வரலாறு பற்றி இப்பிரதேச மக்களிடையே ஒரு வாய்மொழிக்கதை உலாவி வருகின்றது 1931ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வூரின் முகத்துவாரம்தாம் போதி கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது. அதில் பணிபுரியும் ஒரு இந்தியப் பொறியியலாலருக்கு "வாய் பேசமுடியாதபடி பிறப்பிலேயே ஊமையான ஒரு பிள்ளையும் இருந்தது. இதைக் கேள்வியுற்ற அவ் வேலைத்தளத்தில் தொழில் புரிந்த களுதாவளை ஊரைச் சேர்ந்தவர்கள் தங்கள் ஊர் சுயம்பு இலிங்கப் பிள்ளையாரின் மகிமையை அப் பொறியியலாலருக்கு எடுத்துக்கூறி களுதாவளைப் பிள்ளையாருக்கு தங்கள் பிள்ளையின் ஊமையை நீக்க நேர்த்தி வைக்குமாறு கூறினர்.

பொறியியலாலரும் தான் பொங்கலிட்டு நேர்த்தி செய்வதாகவும் நேர்ந்தார். பிள்ளையாரின் திருவருளால் அப்பிள்ளை மூன்று திங்கள் கழித்து பேச ஆரம்பித்தது. பத்தி பரவசம் அடைந்த பொறியியலாலரும் களுதாவளைப் பிள்ளையாருக்கு பொங்கலிட்டு நேர்த்தியை நிறைவேற்ற பூசைப்பொருட்களை சேகரித்துக்கொண்டிருந்தபோது இடைவிடாது தொடங்கிய மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பாலம் கட்டும் வேலையும் தடைப்பட்டது.

இதனால் கவலையுற்றிருந்த பொறியியலரின் கனவில் "கவலைப்படாதே ஒரு மரத்தடியில் ஒரு கல்லை நீர்ப்படை செய்து வைத்துப் பூசனை புரிந்து பொங்கலிடு.... நான் இங்கு உள்ளேன்" என்று கூறி ஒருவர் மறைந்ததாக காலையில் வழித்தெழுந்த பொறியியலாலர் தன்னுடைய வேலையாட்களிடம் கூறினார். கனவின்படி கடல் அருகே கிடந்த கல்லொன்றைச் செப்பமிட்டு சமுத்திரநீர்ப்படை செய்து, அக்கல்லை துவரை மர நிழலில் வைத்துப் பொங்கலிட்டு பூசனை புரிந்தார். களுதாவளை பிள்ளையாரின் வேண்டுதல் நிறைவேறிய இடம் என்பதால் அன்றிலிருந்து தம்பிலுவில் அமைந்துள்ள இக் கோயிலும் களுதாவளைப் பிள்ளையார் என்றே இவ் ஊரவர்களாலும் அழைக்கப் படலாயிற்று என்பர்.

பின்பு 26.06.1971 அன்று, இந்தியாவைச் சேர்ந்த முதமொந்தன் மொழி சுயம்பு நாராயணன் என்னும் திருநெல்வேலி ஜில்லா என்பவரால் சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டது. அதன்



பின்பு 2022 ஆம் ஆண்டு கருவறை, முன் மண்டபம், பெருமண்டபம், வசந்த மண்டபம், பரிபாரத் தேவர் கோட்டங்கள், அலங்காரம் பொருந்திய சிற்பங்கள் கண்கவர் சித்திரங்கள் என்னும் புதுப்பொலிவோடு, கருவறையில் பெரிய சிவலிங்கத் திருமேனி நிலைப்படுத்தப்பட்டு, குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

இக் கோயிலின் சிறப்பு என்னவெனில் கருவறையில் சிவலிங்கம் அமைந்துள்ளது. ஆனால் பூசகர்களும், பத்தர்களும் விநாயகரின் திருப்பெயரையே போற்றிப் போற்றுகின்றனர். கருவறையில் சிவலிங்கம் இருந்த போதிலும் கொடிமரத்திற்கு அப்பால் நந்தி அமைய வேண்டிய இடத்தில் விநாயகரின் எலி வாகனம் அமைந்திருப்பது ஈழத்தின் எந்த சிவாலயங்களிலும் இல்லாத அமைப்பாகும்.

இவ்வாலயத்தில் சிவாகம முறைப்படி தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. வருடந்தோறும் ஆனி உத்தரம் அன்று வருடாந்தப் பெருந்திருவிழாக்கள் நடைபெற்று இறுதியில் தீர்த்திருவிழாவுமும் இடம்பெறும் மற்றும் சிவனிரவு, கழுவாய் வழிபாடு (பிரதோஷம்), திருவாதிரை, பிள்ளையார்நோன்பு ஆகிய விரத வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

# தென்னாட்டு நிகழ்வுகள்



அப்பர் சுவாமிகள் குருபூசை



சித்திரைச் சதயம் - 26-04-2022





தென்னாடு திங்களிதழ் சித்திரை வெளியீடு









சித்திரை வருடப்பிறப்பு - நற்செய்கை (14-04-2022)



பேரூர் ஆதீனம் தென்னாட்டில் சிவபூசை



பேரூர் ஆதீனம் நாடு திரும்புதல்



சித்திரை நிறைமதிப் பூசை





தென்னாடு மேலாளர் அகவை நாள் - 12-04-2022



தென்னாடு இதழ் வழங்கல்





திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவர் ஆசிபெறுதல்

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் இருபதாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு விடை நல்லோரை வைகாசித் திங்கள் 1ம் நாள் நிறைமதி அன்று (15-05-2022 ஞாயிற்றுக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 75 653 3111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org